
# திருத்தவத்துறை
# அருள்மிகு சப்தரிஷீஸ்வரர் திருக்கோயில்
# தலவரலாறு




இராஜகோபுரமும் திருக்குளமும்

திருத்தவத்துறைத் திருக்கோயில் வெளியீடு 1991

(1991)

# திருத்தவத்துறை
# திருக்கோயில் வரலாறு



அருள்மிகு சப்தரிஷீஸ்வரர் திருக்கோயில்
திருத்தவத்துறை (லால்குடி)

(1991)

முதற் பதிப்பு : 1952
மறு பதிப்பு : 1971
திருத்திய பதிப்பு : 1991

விலை ரூ. 2 – 00

ஜோதி பிரிண்டர்ஸ், திருச்சி–2. போன் : 25416

உ

சிவமயம்

# திருத்தவத்துறை திருத்தல வரலாறு

❋

திருத்திப் பதிப்பித்தவர் :

திரு. ஜி. கனகசபை எம். ஏ.,


❋

*வெளியீடு :*

அருள்மிகு சப்தரிஷீஸ்வரர் திருக்கோயில்

திருத்தவத்துறை

லால்குடி :: திருச்சி மாவட்டம்



இராஜகோபுரம்

# முன்னுரை

இத்திருத்தவத்துறை, திருநாவுக்கரசு நாயனாரால் வைப்புத்தலமாகப் பாடப்பெற்றுள்ளது. ஞானசம்பந்தப் பெருமான் இத்தலத்தைப் பாடிப் பரவியதாகப் பெரிய புராணம் பாடுகிறது. இச்சமயக்குரவர்களின் காலம் கி. பி. ஏழாம் நூற்றாண்டு எனத் துணிவு கொள்ளப் பெற்றிருக்கிறது. எனவே இத்திருக்கோயிலின் வரலாறு ஏறத்தாழ ஆயிரத்து முன்னூறு ஆண்டுகட்கு முன்பிருந்தே தொடங்குவதை அறிகிறோம்.

நீர் வளத்தாலும், நிலவளத்தாலும், கலைவளர்க்கும் திறத்தாலும், சமயம் போற்றும் நலத்தாலும், சான்றோர் உறையும் வளத்தாலும், இவ்வூர் தொன்றுதொட்டுவரும் சிறப்புடையதாக இலங்குகிறது. இச்சிறப்புகள் இன்றும் தொடர்வதைக் கண்டு மகிழ்கிறோம்.

இத்திருத்தலத்தில் கோயில்கொண்டுள்ள இறைவனாம் ஏழுமுனிவர்க்கிறைவன்—பெருந்திருபிராட்டியார் (சப்தரிஷீஸ்வரர் — ஸ்ரீமதி) ஆகியோருக்கு பல நூறு ஆண்டுகட்கு முன்னரே ஆன்றோர்கள் திருக்கோயில் எழுப்பினர். அவ்வப்போது திருப்பணிகள் பல செய்யப்பெற்று வந்திருக்கின்றன.

இத்திருக்கோயிலின் திருப்பணிகள் 1952ஆம் ஆண்டு உயர் திருவாளர். L. N. பரமசிவம் பிள்ளை அவர்கள் தலைமையில் விரிவான திருப்பணிகள் செய்யப்பெற்று குடமுழுக்கு விழா நடைபெற்றுள்ளது.

திருச்சிராப்பள்ளி தமிழ்ப்பெரும் புலவரும் கோயில்கள் வரலாற்று ஆசிரியருமான சைவப் புலவர் ஆர். பஞ்சநதம் பிள்ளை அவர்கள் தமக்குக் கிடைத்த சான்றுகளைக்கொண்டு இத்திருக்கோயில் வரலாற்றினை எழுதியுள்ளார்கள்.

இந்நூலில் புதிய வரலாறுகள்—செய்திகள் சேர்த்து திருத்திய பதிப்பினை 1971ல் புலவர் ப. அரங்கசாமி அவர்கள் ஏற்றுச் செய்து தந்து உதவியுள்ளார்கள்.

மேலும் வரலாற்றுச் சிறப்பினைச் செய்பணிட்டு இவ் வாண்டு தொடக்கத்தில் புரவலர் திரு. ஜி. கனகசபை எம்.ஏ. அவர்கள் எழுதித் தந்துள்ளார்கள்.

இறை ஈடுபாட்டுடன் எழுதித் தந்த அவர்கட்கு நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறோம்.

இத்திருக்கோயிலில் நிர்மாணிக்கப்பெற்ற நடராசப் பெருமான் திருச்சபையை 26-8-1971 அன்று மாண்புமிகு அமைச்சர் மு. கண்ணப்பன் திறந்துவைத்து பெருமை சேர்த் தார்கள். அதே நாளில் இந்நூல் வெளியீட்டு விழாவிற்கு தலைமை ஏற்றுச் சிறப்பித்த திருக்குறள்வேள் உயர்திரு. ஜி. வரதராஜன் பி. ஏ. அவர்களும், முன்னாள் அமைச்சர் புரவலர் அன்பில் அவர்களும், முன்னாள் சட்டமன்ற உறுப் பினர் திரு. வெ. ந. முத்தமிழ்ச் செல்வன் அவர்களும், அறநிலைய ஆட்சித்துறை முன்னாள் ஆணையர் திரு. K. S. நரசிம்மன் I. A. S. அவர்களும் அதுபோது கலந்துகொண்டுச் சிறப்பித்தார்கள்.

இந்நூலை வெளியிட இசைவு வழங்கிய அறநிலையத் துறை ஆணையர் உயர்திரு. வ. இராமதாஸ் I. A. S. அவர் களுக்கும், திருச்சி சரக துணை ஆணையர் திரு. கே. என். அழகப்பன் பி. எஸ்ஸி; பி. டி; பி. எல்; அவர்களுக்கும் எங்கள் உளமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

அன்புள்ள
**என். கலைமணி**
செயல் அலுவலர்

# அன்புரை

இந்நூல் திருத்திய பதிப்பாக வெளியிட அனுமதியளித்த, திருச்சி, இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை துணை ஆணையர் அவர்களுக்கும், பதிப்பாசிரியர் அவர்களுக்கும் துணை நின்ற அனைவருக்கும் திருக்கோயிலின் சார்பில் அன்பு கலந்த நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன்.

தங்கள் அன்பார்ந்த
**ந. கலைமணி பி. ஏ.,**
செயல் அலுவலர்

நாள் : *11—4—1991*
லால்குடி

# உள்ளடக்கம்


| எண் | பொருள் | | பக்கம் |
|---|---|---|---|
| 1. | இறைவன் திருவுருவம் | ... | 9 |
| 2. | தலத்தின் பெயர்கள் | ... | ·12 |
| 3. | திருக்கோயிலின் அமைப்பு | ... | 12 |
| 4. | இறைவன் பெயர்கள் | ... | 13 |
| 5. | புனித தீர்த்தங்கள் | ... | 13 |
| 6. | கோயிலின் படம் | ... | 14 |
| 7. | தலப் பெருமைகள் | ... | 15 |
| 8. | திருப்பணிகள் | ... | 16 |
| 9. | சிற்பச் சிறப்புகள் | ... | 17 |
| 10. | தினசரி வழிபாடும், திருவிழாக்களும் | ... | 17 |
| 11. | சொத்துக்களும், வருமானமும் | ... | 20 |
| 12. | நிர்வாகம் | ... | 20 |
| 13. | புராண வரலாறுகள் | ... | 20 |
| 14. | கல்வெட்டுகள் | ... | 23 |
| 15. | இத்தலத்தைக் குறித்தத் திருப்பாடல்கள் | ... | 25 |

உ
சிவமயம்

# திருத்தவத்துறை திருக்கோயில் வரலாறு

## இறைவன் திருவுருவம்

ஆதி அந்தங்கடந்த பரம் பொருளாக இறைவன் விளங்கு கிறான். உலகத்திலுள்ள பல உயிர்களும் துன்பம் நீங்கி இன்பம் பெற்று உய்யும் வண்ணம் இறைவன் அருவநிலை நீங்கி இப்பூவுலகத்தில் ஆங்காங்குள்ள பல தலங்களில் உருவத்திரு மேனி கொண்டு எழுந்தருளியுள்ளான். அன்பு நெறி நின்று வழிபடும் அடியார்களுக்கு அவன் அருள் செய்து வருகிறான். அங்ஙனம் அருள் வழங்கும் சிறப்பிடங்களே ஆலயங்கள் ஆகும்.

பசுவின் உடல் முழுவதும் பால் மறைந்திருந்த போதிலும் மடியின் மூலமாகவே பால் வெளிப்படுவது போலவும், சூரியன் எங்கும் பரவியிருந்தாலும் பளிங்குக் கல்லின் மூலமே கிரணங்கள் விரைவில் வெளிப்படுவது போலவும், நிலத்திற்கடியில் நீர் பரவியிருந்தாலும் தோண்டிய இடத்தில் மட்டும் நீர் தோன்றுவது போலவும், இறைவன் எங்கும் நிறைந்திருந்தாலும் பெரியோர்கள் அமைத்த ஆலயங்களில் உள்ள திருவுருவங்களின் மூலமாகவே இறைவன் வெளிப்பட்டு அன்பர்களுக்கு அருள் செய்கிறான்.

''இருஞ்சுரபிக்கெங்கும் உருக்காண ஒண்ணாத, பால் முலைப்பால் விம்மி ஒழுகுவது போல வெளிப்பட்டருள்வான் அன்பர்க்கே'' (சிவஞான சித்தியார்). ஆதலின் பெறுதற்கறிய மனிதப்பிறவியை பெற்றவர்கள் அனைவரும் பசு — பதியாகிய பரமனை அன்பினால் வழிபட்டு நன்னெறியில் நின்று, அவனருளைப் பெற முயலுதல் மனிதப் பிறப்பின் தலையாய கடமையாகும்.

## திருக்கோயில்கள்


தென்னாடாகிய தமிழ்நாட்டில் பெருமான் உறையும்திருக் கோயில்கள் பல உள்ளன. அவை சிவன் கோயில்கள், முருகன் கோயில்கள், திருமால் கோயில்கள், அம்மன் கோயில்கள் எனப் பலபிரிவுகளுள் அடங்கும்.

சிவன் கோயில்களில் சைவத் தலைவர்களால் தேவாரப் பதிகம் பாடப் பெற்ற தலங்களும், தேவாரப் பதிகங்களில் தலப் பெயர் மட்டும் குறிக்கப் பெற்ற வைப்புத்தலங்களும், தல புராணங்களைக் கொண்ட கோயில்களும், பிற புலவர்களால் தனிப்பாடல்கள் பெற்ற தலங்களும், பிற்காலத்தில் தோன்றிய தலங்களும் பெரும்பான்மையாக உள்ளன.

## தவத்துறை

இவைகளில் தேவாரம் பாடிய மூவர்களாலும் பதிகங்களில் தலப்பெயர் மட்டும் குறிக்கப்பெற்றவை வைப்புத்தலங்கள் எனப்படும். இவ்வகையில் 249தலங்கள் உள்ளன. இவைகளில் என்றும் வற்றாத வளமுடைய காவிரி பாயும் சோழ நாட்டில் திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் உள்ள திருத்தவத்துறை என்னும் தலமும் ஒன்றாகும். இத்தலம் நாவுக்கரசர் தேவாரப் பதிகத்தின் பண்டெழுவர் தவத்துறை என்று குறிக்கப்பெற்றுள் ளது. வைப்புத்தலங்களுள் ஒன்றாக இருந்தாலும் ''தவத் துறை வானவர் தாள் எய்தி இறைஞ்சி எழுந்து நின்றே இன்றமிழ் மாலை கொண்டேத்தி'' என்று பெரிய புராணத்தில் குறிக்கப்படுவதால் திருஞான சம்மந்தரால் இங்குத் தேவாரப் பதிகம் பாடப்பெற்றுள்ளதாக தெரிய வருகிறது.

இத்திருத்தவத்துறை இப்பொழுது லால்குடி என அழைக் கப்படுகிறது. லால்குடி ரயில்வே நிலையத்திற்கும் லால்குடி பேருந்துநிலையத்திற்கும் தெற்கே ஒருகிலோ மீட்டர் தொலை வில்உள்ளது. இத்தலம்திருச்சிக்குகிழக்கேஇருபதுகிலோமீட்டர் தொலைவில் அமைந்துள்ளது. இவ்வூருக்கு தெற்கே மூன்று கிலோ மீட்டர் தூரத்தில் கொள்ளிடமும் காவேரியும் உள்ளது.



ஸ்ரீ பெருந்திருப் பிராட்டியார் கோயில் விமானம்

இவ்வூர் லால்குடி வட்டத்தின் தலைமையிடமாகும். இவ்வூரின் மக்கள் தொகை 25000 ஆகும். இங்கு ஆண்கள் மேல் நிலைப்பள்ளியும், பெண்கள் மேல் நிலைப்பள்ளியும், அரசினர் மருத்துவ மனையும், ஆவணப்பதிவகம், காவலர் நிலையம், அஞ்சல் - தந்தி தொலை பேசி நிலையம், வட்ட ஆட்சியாளர் அலுவலகம், குற்றவியல் முதன்மை நீதி மன்றம் முதலானவை அமைந்துள்ளன. வெள்ளிக்கிழமைகளில் காய்-கனிச்சந்தைகள் கூடுகின்றன. வெற்றிலை, பழம் வியாபாரத்துக்கு முக்கிய இடம்.

இவ்வூர்ப்பகுதி 'இடையாற்று நாடு' என்றும் வடகரை மழவநாடு என்றும் வழங்கப் பெற்று வந்தது என்று வரலாறு கூறுகிறது.

## தலத்தின் பெயர்கள்

இத்தலத்திற்கு, பைரவி வனம், திருத்தவத்துறை, லால்குடி என்ற பெயர் வழக்கில் உள்ளது. சப்தரிஷிகள் - ஏழு முனிவர்கள் தவஞ்செய்த காரணத்தாலும் அறத்துறைகள் செழித்தோங்குவதாலும் திருத்தவத்துறை என்று பெயர் பெறுவதாயிற்று.

இத்திருக்கோயிலின் குடமுழுக்கிற்காகப் பூசப்பெற்றிருந்த சிகப்பு நிறத்துடன் விளங்கியதை கண்டு இப்பக்கம் வந்த மகம் மதியர்கள் இவ்வூருக்கு லால்குடி என்று பெயரிட்டனர் எனக் கூறப்படுகிறது. லால் என்னும் உருதுச் சொல்லுக்கு செந்நிறம் எனப்பொருள்.

## திருக்கோயிலின் அமைப்பு

கோயில் ஊரின் நடுவில் மேற்கு நோக்கி அமைந்துள்ளது. கோயில்நுழைவுவாயிலில் ஐந்துஅடுக்குகள்கொண்டராஜகோபுரம் அமைந்துள்ளது. கோயிலுக்குவெளியே முன்புறம்நாற்கால் மண்டபம்உள்ளது. சுவாமிசன்னதி மேற்குநோக்கியும், அம்மன்

சந்நிதிகிழக்கு நோக்கியும் உள்ளன. கோபுரவாயிலில் நுழைந்ததும்வலப்புறத்தில் சிவகங்கைதீர்த்தக்குளம் உள்ளது. இரண்டாவது வாயிலைக் கடந்ததும் நடன மண்டபம் உள்ளது. இதில் கூத்தப் பெருமானின் நடன காட்சி நடைபெறும். கோயிலின் கருவறையிலிருந்து 4 திருச்சுற்று மாளிகை (பிரகாரங்கள்) உள்ளன. 3வது திருச்சுற்று மடவளாகமும், 4வது திருச்சுற்று தேரோடும் வீதியுமாகும். கோயிலுக்குரிய மரம் (தலவிருட்சம்) அரசு ஆகும். கோயிலின் சுற்றளவு கிழக்கு மேற்காக 358 அடியும், தென் வடலாக 230 அடியும், ஆக 82, 340 சதுர அடியில் அமையப் பெற்றுள்ளது. திருக்கோயிலின் அமைப்பை விளக்கும் படம் அருகே சேர்க்கப்பட்டுள்ளது.

## இறைவன் பெயர்கள்

அத்திரி, பிருகு, புலஸ்தியர், வசிட்டர், கௌதமர், ஆங்கீரசு, மரீசி என்ற சப்த ரிஷிகள் - ஏழு முனிவர்கள் பெருமானை தவத்தின் பால் வழிப்பட்டு பேறு பெற்றதால் சப்த ரிஷீஸ்வரர் என்றும் பெருமான் சோதி வடிவாய் விளங்கியதால் தேஜோவிடங்கர் என்றும் இறைவனுக்குப் பெயர்கள் வழங்குகின்றன. கல்வெட்டுக்களில் பெருமானுக்கு பட்டாரகர், உடையார், மகா தேவர், முதலிய பெயர்கள் காணப்படுகின்றன. அம்மனுக்குப் பெருந்திருப்பிராட்டியார் என்னும் பெயர் வழங்கப்படுகிறது. ஸ்ரீமதி அறம் வளர்த்த நித்ய கல்யாணி என்று அருணகிரியார் அம்பிகையைப் பாடுகிறார்.


## புனிதத் தீர்த்தங்கள் (நீர்த்துறைகள்)

சிவகங்கை:- இது கோபுரவாயிலின் பக்கத்தில் அமையப் பெற்றுள்ளது. தீராதநோய்களை தீர்க்கும் தன்மை உடையது. மழவ மன்னன் இதில் மூழ்கி வெண் குட்டம் நீங்கப்பெற்றான் என்பர்.

இதில் 45 நாள் தொடர்ந்து நீராடி வந்தால் பெருநோய் நீங்குவதாகச் சொல்லப்படுகிறது.

## 4. கோயிலின் படம்


(தென்வடலடி 230 அடி)  (கிழமேல் 358 அடி)




எண்களின் விளக்கம்



முன் மண்டபம்




1. கோபுர வாயிலுக்குப் போகும் வழி
2. கோபுர வாயில்
3. வசந்த மண்டபம்
4. நடராஜ மண்டபம்
5. பெரிய பிரகாரம்
6. யாகசாலை
7. மடப்பள்ளி
8. அம்மன் கோயில்
9. நடராசர் சந்நிதி
10. சண்டேசுரர் சந்நிதி
11. சக்கர தீர்த்தம்
12. நால்வர் மேடை
13. சுவாமி சந்நிதிக்குப் போகும் வழி
14. சுவாமி மூலவர்
15. சிவகங்கைத்தீர்த்தம்
16. நெற்களஞ்சியம்

சக்கர திர்த்தம் :- நால்வர் மண்டபத்திற்கருகில் உள்ளது. திருமால் தன் பெயரால் இத்தீர்த்தத்தை உண்டாக்கி இறைவனைப் பூசித்து சக்கரம் பெற்றது என்பர்.

அய்யன் வாய்க்கால் :- இது கோயிலுக்கு வடபால் அமையப் பெற்றுள்ளது. இது குருவையன் காலத்தில் ஏற்பட்டதாகும்.

வஜ்ர திர்த்தம்:- இது சுவாமி கோயிலுக்கு பக்கத்தில் அமையப் பெற்றுள்ளது.

ஓமதீர்த்தம்:- இது ஓமக்குளம் என வழங்கும் திருக்குளமாகும். இதன் ஒரு பகுதி தற்போது மூடப்பட்டுள்ளது.

காயத்திரி:- இது மாந்துரையிலிருந்து சிறுகால்வாயாகப் பெருக்கெடுத்து சிறுதையூர் சமீபமாகச் செல்கிறது. மலட்டாறு என இந்நாளில் கூறப்படுகிறது.

இத்தலத்திற்கு கிழக்கே 5 கிலோமீட்டர் தொலைவில் அன்பில் ஆலந்துறையில் கொள்ளிடம், காயத்திரி, பங்குனி என்னும் மூன்று நதிகளும் சங்கமம் ஆகின்றன.

## தலப்பெருமைகள்

இத்தலம் மருத நிலமாகிய நஞ்செய் நிலங்களுக்கு நடுவே அமையப் பெற்றுள்ளது. சுற்றிலும் நீர்க்கால்கள் செல்வதால் மிகக் குளிர்ச்சியான சோலைகளை உடையது. 'வளமிக்க மருவார் சோலைத் தவத்துறை' என்று மகா வித்வான் மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்கள் பாடுகிறார். ''செழித்த நெற்செந் நெல்வாரிகளே குவைகுவையாகச் செருக்கு செய்பதி'' என்று திருப்புகழ் கூறுகின்றது.

கோயில் பழம் பெருமையை உடையது. மாந்துறை, பூவாளுர், அன்பில் ஆலந்துறை, திருப்பாற்றுறை என்னும்

புண்ணியத் திருத்தலங்களைச் சுற்றிலும் கொண்ட பெருமை உடையது. மூலமூர்த்தி சுயம்பு மூர்த்தியாகும்.

சப்தரிஷிகள் வழிபட்டதற்கு ஆதரமாய்ப் ''பண்டெழுவர் தவத்துறை'' என்று அப்பர் சுவாமிகளால் பாடப்பெற்றது. சேக்கிழார் பெருமான் திருவாக்கின்படி திருஞான சம்பந்தரால் பதிகம் பாடப்பெற்றது.

அருணகிரிநாதருடைய திருப்புகழும் மகாவித்வான் மீனாட்சிசுந்தரம் பிள்ளை அவர்கள் இயற்றிய பெருந்திருப் பிராட்டியார் பிள்ளைத்தமிழ் நூலையும் இப்பதி உடையது.

இத்தலத்தில் மழவ மன்னனுடைய வெண்குட்டம் நீங்கப் பெற்றது. திருமால், இலக்குமி, முருகன், பைரவி, பராசர் முதலானோர் வழிபட்டு இங்கு பேறு பெற்றனர்.

இத்தலத்தை சேர்ந்தவர்களுக்கு தீவினைகள் சேரா. செல்வமும், திருவும், சேர்ந்திடும். சித்திகள், புத்திகள் வளரும். இத்தலத்திலிருந்து திரு ஐந்தெழுத்து மந்திரத்தை செபிப்பவர் எங்குமாம் சிவன் திருவருளைப் பெறுவர். இத்தலம் வடமொழியிலும் தென்மொழியிலும் புராணங்களை உடையது. பல சிற்ப சிறப்புகளையும், பழங்காலப் பெருமைகளை அறிவிக்கும் பல கல்வெட்டுக்களையும் உடையது.

## திருப்பணிகள்

புதியகோயிலை அமைப்பதைவிடப் பழமையான கோயிலைப் புதுப்பித்தல் மிக்க புண்ணியத்தைத் தரும் என்பர். 'புதிதுறப் பணிகள் வேறு புரிவதிற்பழைய தொன்றை, விதியுளி புதுக்குவோர்க்கு மிக்க புண்ணியத்தான் எய்தும்' என்று கச்சியப்ப முனிவர் பாடியுள்ளார். அதற்கேற்ப பழமையான இத்தலத்தில் பல திருப்பணிகள் அவ்வப்போது நடை பெற்றுள்ளன.

பல்லவ மன்னன் நந்தி போத்தரயன், பாண்டியப் பெரு மன்னர்கள் மாறன் சடையன், வரகுண பாண்டியன், கோப்பர

கேசரி வர்மன், சோழவேந்தன் பராந்தக சோழன் முதலியோர் இத்தலத்து இறைவனை வழிபட்டுத் திருப்பணிகள் பல செய்திருக்கின்றனர். கல்வெட்டுக்களின் மூலம் 10ஆம் நூற்றாண்டில் இக்கோயில் புதுப்பிக்கப்பட்டதாகத் தெரிகிறது. சுமார் 50 ஆண்டுகளுக்கு முன் ஐம்பதாயிரம் ரூபாய் செலவில் ஒரு பெருந் தேர் செய்யப்பட்டது.

பின்னர் 1952ல் திரு. ஜி. கனகசபைப்பிள்ளை அவர்கள் அறங்காவலர்குழுத் தலைவராக இருந்த போது பல உறுப்பினர்களை கொண்ட திருப்பணிக்குழு அமைக்கப்பெற்று கோயிலில் பல திருப்பணிகள் நடைபெற்றன. மதில்கள் செப்பனிடப்பட்டன. புதிய தளங்கள் போடப்பட்டன. விமானங்கள் புதுப்பிக்கப்பட்டன. புதிய சாளரங்கள் அமைக்கப்பட்டன. நால்வர் முதலிய மூர்த்திகளுக்கு மேடைகள் அமைத்து ஸ்தாபிதம் செய்யப்பட்டது. மற்றும் பல திருப்பணிகள் செய்யப்பெற்று, நந்தன ஆண்டு வைகாசி மாதம் 29ம்நாள் (11—6—1952) புதன் கிழமை காலை மகா கும்பாபிஷேகம் - குடமுழுக்குப் பெருவிழா மிகவும் சிறப்பாக நடைபெற்றது. இப்பெருவிழாவின் நினைவாக பெரும்புலவர் திரு. அ. நடேச முதலியார் அவர்கள் துணை கொண்டு பெருந்திரு பிராட்டியார் பிள்ளைத்தமிழ்' என்ற நூல் வெளியிடப் பெற்றது.

## *சிற்பச் சிறப்புகள்*

தென்னாட்டு திருக்கோயில்களில் பலவகைச் சிற்பங்களை காணலாம். இத்திருக்கோயிலின்கல்தூண்களில் அழகிய சிற்பங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இங்குள்ள நடராசப் பெருமானின் உருவம் அழகிய கலைத்திறனைக் கொண்டதாகும். அம்மன் சன்னதி மண்டப கற்தூணில் அழகிய அனுமன் வடிவமைப்பு உள்ளது. அம்மன் பெருவடிவை உடையது.

## *தினசரி வழிபாடும் திருவிழாக்களும்*

இத்திருக் கோயிலில் உள்ள பெருமானுக்கும் பிற இறையுருவங்களுக்கும் நாள்தோறும் அதிகாலை,காலை, உச்சி,மாலை

இரண்டாவது காலம், அர்த்த சாமம் ஆகிய ஆறுகாலங்களில் நீராட்டு வழிபாடுகளும் ஆராதனைகளும் நடைபெறுகின்றன.

விழாக்கள்: ஆண்டுதோறும் சித்திரை வைகாசி மாதங்களில் வசந்த உற்சவமும், ஆடியில் ஆடிப்பூர விழா 10 நாட்களும், புரட்டாசியில் நவராத்திரி விழாவும், ஐப்பசியில் கந்தர் சஷ்டி விழா 7 நாட்களும், கார்த்திகையில் சோமவார விழாவும், தீப தரிசன விழாவும், மார்கழியில் ஆதிரை விழா 10 நாட்களும் மிகச்சிறப்பாக நடைபெறும். தை அமாவாசை பூசம் நன்னா ளில் பஞ்சமூர்த்திகள் அபிஷேக ஆராதனையும், திருவீதி உலா வும் நடைபெறும். மாசியில் மக நன்னாளில் கொள்ளிடம் நதி யில் தீர்த்தவாரியும், இரவு திருவீதி உலாக் காட்சியும் நடை பெறும்.

பங்குனி மாதத்தில் முதலில் அய்யனார்க்கு விழா நடை பெற்று, பிறகுபெருவிழா நடைபெறும்10நாட்களிலும்பெருமான் பல வாகனங்களில் அலங்கரிக்கப்பட்டு வீதி உலாவும் நடை பெறும். 12ம்நாள் இரவு பெருமான் சப்தஸ்தான விழாவாக பல்லக்கில் புறப்பட்டு இடையாற்றுமங்கலம், திருமணமேடு திருமாந்துறை, ஆதிகுடி, அன்பில், சென்னிவாய்க்கால்முதலிய கிராமங்களுக்குச் சென்று காட்சியளித்து 13ஆம் நாள் இரவு சென்னி வளநாடு அருள்மிகு சுந்தரேஸ்வரர் திருக்கோயிலில் அபிஷேக ஆராதனை செய்து பூப்பல்லக்கில் அலங்கரிக்கப் பட்டு திருத்தவத்துறை திருவீதி உலாக்கள் முடிந்து திருக் கோயில் வந்து சேர்வர். இத்திருக்கோயில் விழாக்களில் ஆதி ரைப் பெருவிழாவும், சப்ததான விழாவும் முக்கியமானவை யாகும்.

## திருவாதிரைப் பெருவிழா

இக்கோயிலில் திருவாதிரைப் பெருவிழா ஆண்டுதோறும் மிகச்சிறப்பாக நடைபெறும். மார்கழித்திங்கள் ஆதிரை நாளன்று இறைவன் திருக்காட்சி நிகழும் விழாவிற்கு முன் ஒன்பது நாட்கள் இரவில் நாள்தோறும் மிகச்சிறப்பாக ஒப்ப

ளைகள் செய்யப்பட்ட நடன மண்டபத்தில் இறைவன் நடனக் காட்சி நடைபெறும். ஆதிரை நாளுக்குமுன் இரவு நடராசப் பெருமானுக்கு மிகப்பெரிய அளவில், நாதஸ்வர இசைகள் முழங்க திரு முழுக்காட்டு (மகாபிஷேகம்) நடைபெறும் காட்சி விழிக்கும், செவிக்கும் விருந்தாக அமைவதோடல்லாமல் இறை யுணர்வை வளர்க்கும் மார்க்கமாகவும் அமைகிறது. இத்திரு முழுக்காட்டுச் செலவும், மறுநாள் நடராசப்பெருமான் திருவீதி உலாவரும் செலவும் இந்நகரப் பெருங்குடி மரபினரான தம்பாச்சியாப்பிள்ளை ஆதிரை விழா அறக்கட்டளையாரால் முழுமையாகச் செய்து வரப்படுகிறது.

ஆதிரை நாளன்று நடராசப் பெருமானும் சிவகாம சுந்தரி யும் அணிகளாலும், மலர்களினாலும் நன்கு அலங்கரிக்கப்பட்டு மாலையில் மின் விளக்குகளினால் அலங்கரிக்கப்பட்ட சப்பரத் தில் நாதஸ்வர விற்பன்னர்களின் இசையொலியோடு வீதி உலா வரும் காட்சியைக் காண பல்லாயிரக்கணக்கான மக்கள் கூடுவர்.

இத்திருக்கோயிலில் நடராசப் பெருமானுக்குத் தனி விமானத்துடன் கூடிய சபை புதிதாக ரூ. 34,000ம் செலவில் திருத்தவத்துறைப் பெருநிலக்கிழாரும், ஆதிரை விழாக் கட்டளை பரம்பரை அறங்காவலருமான திருக்குறள்வேள் திரு. கு. வரதராசப்பிள்ளை பி. ஏ. அவர்கள் ரூ. 16,000/-மும் திருக்கோயில் நிதியிலிருந்து ரூ. 18,000/-மும் செலவிடப்பட் டுள்ளது.

இத்திருக்கோயிலுக்கு ரூ. 24,000/- செலவில் அலுவலக் கட்டிடமும், ரூ. 80,000/-ம் செலவில் திருமண மண்டபம் ஒன்றும் கட்டப்பெற்றுள்ளது.

இக்கோயிலில் இறைவன் திருவீதி உலா வருவதற்கு வாகனங்கள் பல உள்ளன. இவற்றுள் இரண்டு இடபங்கள், மயில், குதிரை, கமலம் ஆகிய வாகனங்களுக்கு வெள்ளித்தகடு போர்த்தப்பட்டுள்ளது.

## சொத்துக்களும் வருமானமும்

இக்கோயிலுக்கு அபிஷேகபுரம், மும்முடி சோழமங்கலம், மணக்கால், சாத்தமங்கலம், மங்கம்மாள்புரம், சேஷசமுத்திரம், இடையாற்று மங்கலம் போன்ற கிராமங்களில் 112-00 ஏக்கர் நிலமும், இதன் மூலம் ஆண்டுதோறும் ரூ. 2,50,000/-மும், லால்குடி மற்றும் சிறுதையூர் கிராமங்களில் உள்ள கடைகள், மனைகள், வீடுகள் மூலம் ஆண்டுதோறும் ரூ. 3,00,000/-மும் ஆக ஆண்டு 1க்கு ரூ. 5,50,000/-ம் கிடைக்கின்றது. மேலும் திருவாபரணங்கள் வெள்ளி மற்றும் பொன் இனங்களாக ரூ. 33,80,000/- மதிப்புடையவைகளும் உள்ளன.

## நிர்வாகம்

இக்கோயிலின் நிர்வாகம் ஆதியில் லால்குடி திருக் கோயில்கள் கண்காணிப்புக் குழுவினர்களின் நிர்வாகத்தில் இருந்தது. 1946ஆம்ஆண்டிலிருந்து சென்னை இந்துசமய அற நிலைய ஆட்சித்துறையினரின் நிர்வாகத்தில் உள்ளது. நிர்வாக அதிகாரியும், அறங்காவலர்களும் நிர்வகித்து வருகின்றனர்.

## புராண வரலாறுகள்

இத்தலத்தைப் பற்றிய பெருமைகளும் வரலாறுகளும் வடமொழி ஸ்கந்த புராணத்தில் 5வது ஸ்கந்தத்தில் 6 அத்தி யாயங்களில் நாரதர் மற்ற முனிவர்களுக்கு கூறியதாகச் சொல் லப்பட்டுள்ளன. அவைகளுக்கு தமிழில் மொழி பெயர்ப்பும் உண்டு. தமிழில் திருத்தவத்துறை புராணம் என்னும் ஓர் செய் யுள் நூலும் உண்டு.

வரலாறுகளில் சில பின் வருவன:-

சப்த ரிஷிகள் வழிபட்டது:- முற்காலத்தில் தாரகன் என் னும் அசுரனைக் கொன்று தேவர்களைக் காக்க வேண்டி சிவ பெருமான் திருவருளால் முருகக் கடவுள் அவதாரஞ் செய்து குழந்தையாகத் தோன்றினார். ரிஷிபத்தினிகளில் அருந்ததி

என்பர் அக்குழந்தைக்கு பால் ஊட்ட மறுக்கவே கார்த்திகைப் பெண்கள் அறுவரும் அக்குழந்தைக்குப் பால் கொடுத்தனர். இச்செய்தியை அறிந்த ஏழு முனிவர்களும் தங்கள் மனைவி மார்களை சபித்து விட்டனர். இதையறிந்த முருகப்பெருமான் முனிவர்களை சபிக்க அவர்கள் சாபம் நீங்கும் பொருட்டுத் திரு. வையாற்றுக்குச் சென்று தங்கி அங்கிருந்து இத்தலத்துக்கு வந்து தங்கி தபம் செய்து தங்கள் சாபம் நீங்கப்பெற்று பெருமா னின் திருவருளைப் பெற்றனர். இப்படி ஏழு முனிவர்களுக்கும் அருள் செய்ததால் இத்தலபெருமானுக்கு எழு முனிவர்க் கிறைவன் (சப்தரிஷீஸ்வரர்) என்று பெயர் வழங்கலாயிற்று.

இலக்குமி இத்தலத்தில் தவம் செய்து திருமாலை நாயக னாகப் பெற்றாள் என்பர். பைரவி என்னும் காளி, கூத்தப் பெருமான் நடனம் செய்யும்போது ஆரவாரம் செய்ததால் பெருமான் அவளை கர்வ பங்கம் செய்து அடக்கினார். இத னால் இத்தலத்திற்குப் பைரவி வனம் என்றபெயர் ஏற்பட்டது. இக்கோயிலில் இதனை நினைவுகூறத்தக்கவகையில் சிலை வடிவமைப்பு ஒன்று உள்ளது.

மாங்கல்ய முனிவர் இத்தலத்தில் தவம் செய்து இவ்விடத் தில் தெய்வத்திருவருளால் தோன்றிய ஓர் பெண் குழந்தையை எடுத்து வளர்த்து வந்தார். அது சூடிக்கொடுத்த நாச்சியாரைப் போல பெருமானை வழிபட்டு வந்தது. அந்தப் பெண்ணை பெருமான் பங்குனி மாத உத்திர நாளில் மணம் செய்துகொண் டார். இதைக் குறித்த புராணப் பாடல் உண்டு.

திருமால் தன் பெயரால் சக்ர தீர்த்தம் என்னும் ஓர் தீர்த் தத்தை உண்டாக்கி இறைவனைப் பூசித்துச் சக்கரம்பெற்றார். பிரமன் ஓர் யாகம் செய்யும்போது தனது மனைவியரான சரஸ்வதி, சாவித்திரி, காயத்திரி என்னும் மூவரில் காயத்திரி என்பவள் நதிவடிவாய்த் தோன்றிக் காப்பாற்றினாள். இந்நதி மாந்துறையிலிருந்து புறப்பட்டு சிறுவாய்க்காலாக ஓடி வரு கிறது. பராசுர முனிவர் தவஞ்செய்து முக்தி பெற்றார்.

மழவ மன்னன் ஒருவன் வேட்டையாடி வந்தபோது இத் தலத்திலுள்ள சிவகங்கை தீர்த்தத்தில் நீராடிப் பெருமானை வழிபாடு செய்ய தனக்கிருந்த வெண்குட்ட நோய் நீங்கப்பெற் றார். இவனே மழவ நாட்டுப் பிருகச் சரணம் என்னும் பிரா மண வகுப்பாரைக் குடியேற்றி வைத்து கோயிலில் வேத பாரா யணம் செய்ய ஏற்பாடு செய்தான். இதனால் இத்தலப்பகுதி மழவ நாடு என்னும் பெயர் பெற்றது. (இவ்வரலாறு தேவஸ் தானத்திலுள்ள குறிப்புகளைக் கொண்டும் செவிவழிச் செய்தி யாகவும் அறியப்பட்டன)

சைவ சமயக் குறவர்களில் திருஞான சம்பந்தர், திருவா னைக்கா இறைவனை வழிபட்டு பதிகம் பாடிப் பிறகு காமர் பதியாகிய பூவாளூரில் சிலகாலம் தங்கியபின் திருத்தவத்துறை யில் எழுந்தருளியுள்ள இறைவனை வணங்கித் தமிழ்ப் பாமா லைகளை பாடித் துதித்து பக்கத்திலுள்ள தலங்களுக்கு செல்வா ராயினர். இவ்வரலாற்றினால் திருத்தவத்துறைக்குத் திரு ஞான சம்மந்தர் பாடப்பட்ட தேவாரப் பதிகம் உண்டென்று தெரிய வருகிறது. இதைக் குறிக்கும் சேக்கிழார் சுவாமிகள் பாடிய பெரியபுராணப் பாடல் பின்னே சேர்க்கப்பட்டுள்ளது

ஸ்ரீமதி அம்பாளைப் பற்றித் தியாகய்யர்வாள் அருளிச் செய்த பஞ்சரெத்தினக் கீர்த்தனைகள் அம்பிகையின் சந்நிதி முதற் சுற்றில் மேல்புறம் கவினுறக் கல்வெட்டில் காட்சியளிக் கிறது. அதே போன்று திரிசிரபுரம் மகாவித்வான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை பெருந்திரு பிராட்டி பெருமையைப் பாடிய 100 பாடல்களும் அம்பிகையின் முதல் சுற்றில் கருத்தை ஈர்ப் பனவாக உள்ளன.

## தலத்தின் தனிச்சிறப்பு

சுவாமி சன்னதியின் முதல்சுற்றில் வீணா தட்சணாமூர்த்தி திருவுருவம் கருவறையின் வெளிப்புரச் சுவற்றில் மிக அற்புத மாக வடிக்கப்பெற்றிருக்கிறது. அதே திருச்சுற்றில் தென்புறம் அமிர்தகடேசுவரர் திருமண்டபத்திற்கு முன்னர் ஜீரஹரேசு

வரர் சந்நிதி ஒன்று உண்டு. அருஉருவத்திருமேனியாகக் கல்லிலேயே யந்திரம் பதிக்கப் பெற்றிருக்கிறது. வெப்பத்தினால் (ஜுரம்) பீடிக்கப்பட்டவர்கள் இரு கரங்களையும் அந்த யந்திரம் உள்ள இடத்தில் பதித்துக் கொண்டு சிலநிமிடங்கள் நின்று தியானித்தால் வெப்பம் நீங்கும் என்பது ஐதீகம்.

## கல்வெட்டுகள்

இத்தலத்தைப் பற்றிய பல கல்வெட்டுகள் கோயில் திருமதில்களில் உள்ளன. அவைகள் தென்னிந்தியக் கல்வெட்டுப் பகுதிகளில் 1892ல் 84 முதல் 89 எண்கள் வரையிலும், 1929ல் 98 முதல் 140 எண்கள் வரையிலும் அரசினரால் நகல் எடுக்கப் பட்டுள்ளன. அவைகளால் பல மன்னர்கள் கோயிலுக்குச்செய்த திருப்பணிகளும் அறங்களும் தெரிய வருகின்றன. அவைகளின் விபரங்கள் பின் வருமாறு:-

தெள்ளாற்றுப் போரில் வென்றவனும் பல்லவ அரசனுமான நந்தி போத்தரயன் கி.பி. 811ல் இடையாற்று நாட்டிலுள்ள திருத்தவத்துறை மகாதேவருக்கு நந்தா விளக்கெரிப்பதற்கு நன்னி மங்கலம் சபையாரிடம் பொற்காசுகள் கொடுத்தான்.

மாறன் சடையன் என்னும் பாண்டிய குலபதி வரகுண மகாராயன் தன் 13வது ஆண்டில் தனூர் மாதம் செவ்வாய் கிழமை சதய நாளில் இடையாற்று நாடு இளம் பெருங்கை இருக்கைச் சபையார்க்கு, ஆண்ட நாட்டு வேளானிடம் கோயிலில் நந்தா விளக்கெரிக்க 120 பொற்காசுகள் கொடுத்தான். விளக்கெரிக்கத் தவறினால் 500 காணம் பொன் தண்டம் கொடுப்பதாகச் சபையார் ஒப்புக் கொண்டனர்.

சோழ மன்னன் ராஜகேசரிவர்மனது 13வது ஆண்டில் மேற்படி மன்னனின் சகோதரி நங்கை வரகுண பெருமானார், கோயிலில் நந்தா விளக்கெரிப்பதற்கு வடகரை மழவநாட்டில் களார கூற்றத்துப் பிரமதேயமான மணக்கால் சபையாரிடம் 30

கழஞ்சு பொன் கொடுத்து, சபையார் பொன்னைப் பெற்றுக் கொண்டு கோயிலுக்கு நிலம் விற்பனை செய்தது. (இக்கல் வெட்டுக்கள் சப்த ரிஷிஸ்வரர் கோயிலில் வடபுறத்து மதிலில் இருப்பதாகச் சொல்லப்படுகிறது)

கோயிலின் தெற்கு மதிலில் உள்ள கல்வெட்டுக்களில் மதுரை கொண்ட கோபரகேசரிவர்மன்-முதல் பராந்தக சோழ னது 37ஆம் ஆண்டில் சிவகேசரி பிடாரன் என்பவன் திருத் தவத்துறைப்பட்டாரகர் திருமுன்பு தினமும் மூன்று காலமும் பிராமணர்களைக் கொண்டு திருப்பதிகம் விண்ணப்பம் செய்ய நிலம் தானம் செய்தான்.

மேற்படி பராந்தகன் மகன் இராஜகேசரிவர்மனின் 3-ஆம் ஆண்டில் கோயிலில் திருப்பதிகம் விண்ணப்பம் செய்வதற்கு உதவிய மானியம் போதாமையால் முன் உதவிய சிவகேசரி பிடாரரே மேலும் சில நிலங்களை விலைக்கு வாங்கி உதவி அதன் வருமானத்தை கொண்டு திருப்பதிகம் விண்ணப்பம் செய்வார்க்கும் பிறவற்றுக்கும் வகை செய்தார்.

84-89 எண்களில் உள்ள கல்வெட்டுக்களில் கோ-விஜய நிருபதுங்கன் - விக்கிரமன், மதுரையும் ஈழமும் கொண்ட கோ-பரகேசரிவர்மன் (905-47) கோ-ராஜகேசரிவர்மன் முதலிய மன்னர்களின் காலங்களில் கோயிலுக்கு பல தானங்கள் செய் யப்பட்டதாகத் தெரிகிறது.

நாம் அறியும் உண்மைகள்:-

இக்கல்வெட்டுக்களாலும் சேக்கிழார் பாடிய புராணப் பாட லாலும் இத்தலத்திற்குத் திருஞான சம்பந்தர் பாடிய தேவாரப் பதிகம் உண்டென்பதும், அப்பதிகங்களையே பிராமணர்கள் கோயில் சந்நிதியில் விண்ணப்பம் செய்து பாராயணம் செய்து வந்தனர் என்பதும் புலனாகின்றன.

மேலும் இச்சாசனங்களால் இத்தலப்பகுதி வடகரை மழவ நாடு என்றும், பாண்டியரது ஆட்சிக்காலத்தில் பாண்டிய குல

பதி வளநாடு என்றும், சோழ மன்னரது ஆட்சிக்காலத்தில் இராசராச வளநாடு-பாண்டிய குலாசனி வளநாடு என்றும், இடையாற்று நாடு என்றும் பெயர்கள் வழங்கி வந்ததும், சோழ, பாண்டிய மன்னர்களும் பல்லவர் முதலியோரும் இத்தலத்திற்குத் திருப்பணி செய்த விபரமும் தெரிய வருகின்றன.

திருச்சி மாவட்டம் அரசுப் பதிவிதழில் (கெசட்டீர் புத்தகத்தில்) குறிப்பிட்டபடி 1752ல், லால்குடியை பிரெஞ்சுக்காரர்கள் கைக்கொண்டு இவ்விடத்தை ஓர் வியாபாரத் தலமாக்க எண்ணியிருந்தனர். ஆனால் ஆங்கிலேயர்கள் படையெடுத்துப் போர் செய்து லால்குடியைத் தங்கள் வசம் மீட்டுக் கொண்டனர். எனவே இவ்விடம் 18ஆம் நூற்றாண்டில் போருக்குரிய இடமாக இருந்த செய்தியும் தெரிய வருகிறது.

நீண்ட இடைவெளிக்குப் பிறகு இத்திருகோயிலின், கோபுரங்கள், விமானங்கள், மண்டபங்கள், தளங்கள் மற்றும் சிதலமடைந்த அனைத்து பகுதிகளையும், திருப்பணிகள் செய்து குடமுழுக்கு நடத்த வேண்டுமென்று திருச்சி மாவட்ட இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை-துணை ஆணையர் அவர்கள் உத்தரவின் படி காஞ்சிப்பெரியவர் அருளாசிபெற்று அருள்மொழியரசு திருமுருக கிருபானந்த வாரியார் சுவாமிகள் அவர்களை புரவலராகக் கொண்டு ஒரு திருப்பணிக்குழு அமைக்கப்பட்டு, ரூ. 7,12,000/-ம் செலவில்திருப்பணி வேலைகள் நடைபெற்று வருகின்றன.

## இத்தலத்தைக் குறித்தத் திருப்பாடல்கள்

திருநாவுக்கரசர் திருத்தாண்டகம்:-

1. கயிலாய மலையெடுத்தான் கரங்களோடு
   சிரங்களுரம் நெரியக்கால் விரலாற்செற்றோன்
   பயில்வாய பராய்த்துறை தென்பாலைத்துறை
   பண்டெழுவர் தவத்துறைவெண் துறைபைம்பொழில்

குயிலாந்துறை சோற்றுத் துறைபூந்துறை
பெருந்துறையுங் குரங்காடு துறையினோடும்
மயிலாடுதுறை கடம்பந்துறை யாவடுதுறை
மற்றுந்துறையனைத்தும் வணங்குவோமே.

சேக்கிழார் சுவாமிகள் அருளிய பெரிய புராணப்பாடல்

2. கைதொழு தேத்திப்புறத்தணைந்து காமர் பதியதன்
கண்சில நாள்
வைகி வணங்கி மகிழ்ந்தணைவார் மன்னும் தவத்துறை
வானவர்தாள்
எய்திஇறைஞ்சி எழுந்து நின்றேஇன்றமிழ் மாலை
கொண்டேத்திப் போந்து
வைதிகமாமணி அம்மருங்குமாற்றுளதானம் வழுத்திச்
செல்வார்.

அருணகிரி நாதர் பாடிய திருப்புகழ்:-

3. காரணியுங் குழலைக்குவித்திடு
கோகனகங்கொடு மெத்தெனப் பிறர்விரகாலே
காணவருந்தி முடுத்திடக்கடு
காதளவுங்கய லைப்புரட்டிம
ளாதிகள் வஞ்சமி குத்திடப்படி
காமுக ரன்புகுவித்த கைப்பொருள் உறைவாகிப்
பூரண கும்பமெனப் புடைத்தெழு
சீதள குங்கும மொத்த சித்திர
பூழித கொங்கையிலுற்று முத்தணி பிறையான
போருவை யொன்று நெகிழ்த்துருக்கி மெய்
யாரையும் நெஞ்சை விலைப்படுத்திடு
பூவையர் தங்கள் மயக்கைவிட்டிட அருள்வாயே
வீரபுயங்கிரி யுக்ர விக்ரம
பூதகணப்பல நிர்த்த மிட்டிட
வேகமுடன் பறைகொட்டிடக்கழு கினமாட
வீசிய பம்பர மொப்பெனக்கிளி
வீச நடஞ்செய் விடைத்தனித்துசர்

வேத பரம்பரை யட்களித்திட வரும்வீரா
சீரணியுந்திரை தத்து முத்தெறி
காவிரியின் கரை மொத்து மெத்திய
சீர்புனை கின்றதிருத்தவத்துறை வாரும்வாழ்வே
சீறியெதிர்ந்தவரக் கரைகெட
மோதியடர்ந்தருள் பட்சமுற்றிய
தேவர்கள் தஞ்சிறை வெட்டி விட்டருள் பெருமானே

4. நிறைத்த நித்திலநீள் மணிமாலைகள்
பொறுத்த வெற்பிணை மார்முகைமேலணி
நெறித்த நெய்க்குழல் வாள்விழி மாமதி முகமானார்
நெளித்த சிற்றிடை மேல்கலை யாடையை
யுடுத்தியத்தமுளோர் தமையேமயல்
நிரப்பி நித்தமும் வீதியில் நேருறு நெறியாலே
கரைத்தி தக்குயில்போல் மொழி மாதர்கள்
வலைக்கு ளிற்குழ லாவகை யேபுன
கழற்று தித்திடு வாழ்வது தான்மன துறயேவிக்
கதித்த பத்திமை சாலடியார் சபை
மிகுத்தி ழிக்குண பாதக னேனுயர்
கதிக்கடுத்துயர் வாகவு மேயருள் உரையாயோ
வரைத்தனுக்கரர் மாதவமேவிள
ரகத்திடத்தினில் வாழ்சிவனார்திரு
மணிச்செவிக்குள் மெய்ஞ்ஞானம தோதியவடிவேலா
மதித்த முத்தமிழாய் வினர்மேலவ
ருரைத்துளத்திருவாசகமானது
மணத்து ளெத்தழ கார்புகழ்வீசிய மணிமாடத்
திரைக்கடற் பொரு காவிரி மாநதி
பெருக்கெடுத்து மெயாய்வள நீர்பொலி
செழித்த நெற்செநெல் வாரிகளேகுவை குவையாகச்
செருக்கு செய்ப்பதி வாழ்முருகாவறம்
வளர்த்த நித்ய கல்யாணிக்கு பாகரி
திருத்தவத்துறை மாநகர் தானுறை பெருமானே.

## பெருந்திருப்பிராட்டியார் பிள்ளைத்தமிழ்: மகாவித்வான் மீனாட்சி சுந்தரம்பிள்ளை அவர்கள் இயற்றியது.

5. ஆக்கல்முதலா வைந்தொழிலும்
அவிருமதியஞ் சடைமுடித்த
அமலப்பெருமாற் குடனிருந்தன்
யாகமுடித்து வரும் பாவாய்
தாக்குமலமூன்ற றச்சவட்டித்
தாவா விருவல்வினை முருக்கித்
த குமொன் றடைய எளியேற்குந்
தண்ணங் கருணை புரிதாயே
மேக்கு நிவந்த செழும் பொழிலின்
விடபத்தலரு நறுமலர்கள்
விரைத்த சுவைத்தேன் அசும்பூறி
விசும்பினெவர்க்கு மிசும்புபட
வாக்கும் வளம்சேர் தவத்துறையில்
வாழ்வே வருக வருகவே
வான்றோய் குடுமி வரைமுளைத்த
மருந்தே வருகவருகவே.

6. அரும்பே புரையு மிளமுலைப் பெண்
அரசே வருக அன்பருளத்(து)
அமுதே வருக எவ்வுயிர்க்கும்
அனையே வருக இனியசுவைக்
கரும்பே வருக பெருங்கருணைக்
கடலே வருக பரஞ்ஞானக்
கனியே வருக ஓங்கொளியாம்
கடவுட் குறையுளே வருக
இரும்பே தைமையென்னுயிர்ந் துணையாம்
இன்பப்பெருக்கே வருக முரு
கேத்துங்குழற் பூங்கொடி வருக
யாருந்துதிக்கும் சைவநெறி

வரும்பேர் மருவும் தவத்துறையில்
வாழ்வே வருக வருகவே
வான்றோய் குடுமி வரை முளைத்த
மருந்தே வருக வருகவே.

## பழூர் குமாரசாமி முதலியார் இயற்றியது

திருத்தவத்துறை புராணம்:

### திருவாள விநாயகர்

7. திருவாரும் சசிமவுலி திருவடிக்கன் பெனுமுன்மை சிறக்க வேழத்(து)
உருவாகு மொருமுகமும் இருசெவியும் முக்கண்ணும் உயர் நாற்றோளும்
தருவாரும்ஐங்கரமும்அறுகொம்பும் எழுகொம்பும் தாங்குஞ்சைவ
மருவாருந்தவத்துறைவாழ் திருவாள விநாயகனை வணங்கச் செய்வோம்.

### முருகன்

8. எம்முளத்திடர்கள் அகற்றிடென்றமரர்
இரந்திடப்புரந்தர னேத்த
விம்முளக்கருஞ்சூர் உடல்பிளந்தடல்கள்
வேற்கரத் தந்தணர் வேந்தை
மம்மர்கெட்டோட மலையமா முனிக்கு
மறைமுதற்பொருள் வெளியாக்கும்
செய்மணித்தண்டை நூபுரக் கழற்பூஞ்
சேவடிச் சேவகன் தொழுவோம்.

### கூத்தப்பெருமான்

9. திருவளர்பூஞ் சிவகங்கைத் தீரத்தோர் பாகத்துத் தேவிகாண
முருகுளருஞ் சுகந்தமலர் முகுந்தன்முத லோநிறைஞ்ச முரசமார்ப்பத்

தருவளரு நான்மறையும் சயசயவென் றேத்தவெழு
தவத்தோர் வாழ்த்த
மருவளருந் திருத்தெய்வ மன்றினடம் புரிசிவன்ருள்
மலர்கள் போற்றி.

## தவத்துறை சிவக்கொழுந்து

10. திருமருவு நெடியோடுந் திசைமுகனுந்
தேவர்களும் தேவதேவே
அருமருளையா கமமனைத்தும் தவத்துறையை
அடைந்தோர்கட்கு அருள்வாய் என்னும்
பொருணிலைமை யூயுறைவோய் இன்னகரத்
தரசிருந்த பொற்பென்றேத்த
மருவியருளோடிருந்த தவத்துறையிற்
சிவக்கொழுந்தை வணக்கஞ்செய்வார்.

## பெருந்திருப் பிராட்டியார்

11. வருந்திருச் சிவிகை கவிகை மாதங்கம்
வயப்பரி உபயசா மரைகள்
அருந்திறன் மடங்கல் ஆசன மாயுள்
அரசபி டேகமார் கல்வி
இருந்துள நினைப்போர்க் கிம்மையே அருளி
அம்மையுமுத்தி யீந்திடலால்
பெருந்திருவாட்டியெனும் பெயர்நாட்டெம்
பிராட்டி பொற்பாதம் புயம்போற்றி.

## திருமால்

12. இலகுநெடு வளைத்திகிரி கரனுதர முலகம்வளர்
எம்மான்பெம்மான்
அலைகடலில் அரவணை யிற்றுயிலி நடங்கண்டபிரான்
அகலாவின்பச்
சலசநிற வதனநுதல் அறிவைதவர் தவத்துறையில்
தயவாய்நிற்கும்
மலர்மகளை மருமமிசை யிருத்திருமாய் திருத்தாளென்
மனத்துள் வைப்போம்.

## திருஞான சம்பந்தர்

13. பரசமயக் குரும்பகற்றி உட்சமய மைந்தினையும்
பரிந்து பார்த்துச்
சிரபுரத்துச் சைவ சிகாமணிதானால் அச்சைவத்
தெய்வம்வைகி
வரமளிக்குங் கூடலில் வேதாந்த சித்தாந்த வரம்புகண்ட
குரவனருள்திருஞான சம்பந்தன் செஞ்சரணம் குறித்துள்
வைப்போம்.

## நாவுக்கரசர், சுந்தரர், மணிவாசகர் முதலியோர்

14. பண்டெழுவர் தவத்துறையென் றடைவுதிருத் தாண்டகத்
திற் பகர்ந்தோன்போற்றி
தெண்டிரைமுன் நீர்முதலை மதலைதரச் செய்வதன்ராள்
சிந்தித்தேத்தி
அண்டர்பிரான் பரியேறியருளேற்ற வாசகஞ்சொல்
அவன்தாள்போற்றி
புண்டரநீறணி மற்றை யறுபான் முத்தொண்டரையும்
போற்றல்செய்வோம்.

## தவத்துறை அடியார்கள்

15. வானவர்கள் மாலயனும் நாலுமறை
வேதியரும் வந்தித்தேத்த
ஞானவர்கள் ஏழ்முனிவர்க்கருள்புரிந்த
திருவடியை நம்பி வாழ்வோர்
ஏனமினமான சிவகங்கை நகர்க்
கரசனுக்கிங்கிதமாய் வாழும்
தானவர்கள் பரிகலத்தோர் தவத்துறையிற்
பிறந்தோர்கள் சரணம் போற்றி.

16. திருத்தவத்துறையைச் சேர்ந்தவர்தம்மைச்
சேர்ந்திடா தீவினை நோய்கள்

திருத்தவத்துறையைச் சேர்ந்தவர் தமக்குச்
சேர்ந்திடும் செல்வமும் திருவும்
திருத்தவத்துறையைச் சேர்ந்தவர் தமக்குச்
சித்திபுத்திகள் வளரும்
திருத்தவத்துறையைச் சேர்ந்தவர் எல்லாம்
சேர்குவர் எங்குமாம் சிவனை.

17. மங்கலத்தொழில் கொண்டங் கிருந்தருளும்
மணவணி மாதினை மாதர்
செங்கரமேந்திச் சிவமணவாளன் சேர்ந்தனன்
என அழைத்திறைபால்
தங்குற இருத்த இருந்தனள் அமரர் சயசய
என்றடி தாழ்ந்தார்
பங்குனிமாதத்து உத்திரநாளில் பகர்குரு
வாரவோரையினில்.

## வாழ்த்து

18. வான்முகில் வழாது பெய்க
மலிவளம் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க
குறைவிலாது உயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க
நற்றவம் வேள்வி மல்க
மேன்மை கொள்சைவ நீதி
விளங்குக உலகமெல்லாம்

கந்தபுராணம்